

திருச்சி ஏடமலை பட்டியில் கழக முதன்மைச் செயலாளரும் மேற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான கே.என்.நேரு அவர்கள் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரிக்க சென்றபோது அங்குள்ள பெண்கள் அனைவரும் ஒன்றாக திரண்டு வந்து எங்கள் வாக்கு உதயசூரியனுக்கே என்று மகிழ்ச்சி பொங்க, ஆரத்தி எடுத்து ஆரவாரத்துடன் கூறினர். அவருடன் மாநகரச் செயலாளர் மேயர் அன்பழகன், மாவட்டத் துணைச் செயலாளர் முத்து செல்வம், விஜயா ஜெயராஜ், காஜாமலை விஜய், கிராப்பட்டி செல்வம், தொ.மு.ச. மாவட்ட அமைப்பாளர் குணசேகர், அருமைராஜ், சோழன், சம்பத், முத்து, பழனி. வழக்கறிஞர்கள் கவியரசன் ஷீலா அந்தோணி மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் கவிதா உட்பட பலர் கலந்து கொண்டனர்.





தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி காங்கிரஸ் கட்சி வேட்பாளர் சங்கை ச.கணேசனை ஆதரித்து சங்கரன்கோவில் திருவேங்கடம் சாலையில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கழக அரசின் சாதனைகளை எடுத்துக் கூறியும், சிறப்பான 2026 தேர்தல் அறிக்கை பற்றியும்,முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் நிறைவேற்றப் பட்ட பல்வேறு திட்டங்கள் குறித்தும் விளக்கிக் கூறி கை சின்னத்திற்கு தீவிரமாக வாக்கு சேகரித்தார். நிகழ்வில் முன்னாள் அமைச்சர் தொகுதி பார்வையாளர் ச.தங்கவேலு,கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.


# தமிழகத்தை ஆள்பவர்கள் தமிழர்களாக தமிழ்நாட்டில்தான் இருக்க வேண்டும்! டெல்லியில் இருக்கக் கூடாது!

## கொளத்தூரில் கமல்ஹாசன் பேச்சு!

*சென்னை, ஏப். 19 -*

தமிழகத்தை ஆள்பவர்கள் தமிழர்களாக இருக்க வேண்டும், டெல்லியில் இருக்கக் கூடாது என்று கொளத்தூரில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களை ஆதரித்து மக்கள் நீதி மய்யம் தலைவர் கமலஹாசன் பேசினார். கொளத்தூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட அகரம் சந்திப்பு பகுதியில் நேற்று முன்தினம் மாலை கொளத்தூர் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களை ஆதரித்து மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமலஹாசன் தேர்தல் பிரச்சா ரத்தில் பேசியதாவது:-

நல்ல உள்ளங்கள் நிறைய பேர் உள்ள கட்சி தி.மு.க. அதை சிறு வயதிலிருந்து பார்க்கிறேன். மூன்று தலைமுறைகளாக எனக்கு தி.மு.க. உடன் தொடர்பு உள்ளது. மற்ற கூட்டங்கள் விபத்துகள் நடக்கும் கூட்டமாக இருக்கும். ஆனால் இங்கு அப்படியில்லை. எதற்கு இந்த ஆட்சி நீடிக்க வேண்டும் என்பதை யோசிக்க வேண்டும் சொன்னதை செய்துள்ளார். இந்தியாவிலேயே முதல் இடம் பிடித்துள்ள தமிழகம் என்ற பெயர் எப்போது வந்துள்ளது என்பதை யோசித்து பார்க்க வேண்டும். வேறு யாராவது அதை செய்துள்ளார்களா?



ஸ்டாலின் அவர்களுடன் உள்ள என் நட்பு பல தலைமுறை தாண்டியது, அது தற்பெருமை ஆகாது. 8000 ரூபாய் கூப்பன் யார் வீட்டு சொத்து என சிலர் கேட்பர். அதை நான் சொல்கிறேன். நேரு உங்களுக்கு அணை கட்டி விட்டு சென்றார். அது யார் வீட்டு சொத்து. ஐ.ஐ.டி., யார் வீட்டு சொத்து. அதே வீட்டிலிருந்து தான் எடுத்து ஸ்டாலின் தருகிறார். அது உங்களுடையது. 34 விழுக்காடு கல்வி பெண்களுக்கு இங்கு வந்துள்ளது. பள்ளியில் முதல் மாணவன் இங்கு போட்டியிடும் மாணவன். அவரை தேர்வு செய்வது தான் உங்கள் புத்திசாலித்தனம்.

இன்று வரை பா.ஜ.வை சேர்ந்தவர் யாருக்காவது ஐ.டி., ரெய்டு வந்ததுண்டா? யோசித்து பார்க்க வேண்டும். இதெல்லாம் ஒரு தலைமுறைக்கு தெரியவில்லை. எல்லாம் திராவிட குடும்பம் ஆகாது. அங்கே ஓட்டு போட்டால் இந்தியாவுக்கான பிரதமர் மற்றும் தமிழகத்திற்கான முதல்வர் டெல்லியில் தான் இருப்பார். தமிழகத்திற்கான முதல்வர் தமிழகத்தில் தமிழ் உணர்வுடன் இருக்க வேண்டும்.

அப்படித்தான் தான் அண்ணா முதல் தமிழக மக்கள் தேர்வு செய்துள்ளார்கள். தி.மு.க.வுக்கு ஓட்டு போடுபவர்கள் அறிவுள்ளவர்களாக இருந்தால் போதும். நாங்கள் திராவிட குடும்பம் என்பது போகப் போகத் தெரியும். இது நமக்கான ஓட்டு. என் படப்பிடிப்பு எல்லாம் அப்புறம் பார்க்கலாம். என்னை வாழ வைத்த தமிழகம் மீண்டும் வாழ வைக்கும். என் குரல் ஓயாது. நீங்கள் ஓய விடக்கூடாது. தலைவன் இருக்கின்றான் என்ற பாட்டு விரைவில் உங்களை வந்தடையும் அதை கேட்டு விட்டு உங்கள் ஓட்டை போடுங்கள்.

இவ்வாறு அவர் பேசினார்.

## 40க்கு 40 என்ன செய்யும்?

# விஸ்வகுரு கூட்டத்தை வச்சு செய்யும்!



நாடாளுமன்ற ஜனநாயகத்தை சிதைத்து, தமிழ்நாடு மற்றும் தென்னிந்திய மாநிலங்களின் குரல்வளையை நெரிக்க நினைத்த வஞ்சக ஒன்றிய பா.ஜ.க. அரசின் முயற்சி, மோடி அமித்ஷா கண் முன்னாலேயே தோற்கடிக்கப்பட்டுள்ளது.

விஸ்வகுரு கூட்டத்தின் இந்த தோல்விக்கு வித்திட்டவர் யார் தெரியுமா?

தொகுதி மறுவரையறை குறித்து முதன் முதலில் எச்சரித்த திராவிட நாயகர் மாண்புமிகு முதலமைச்சர் நம் கழகத் தலைவர் தான்.

2014, 2019 ஆகிய இரண்டு முறையும் அதிகாரப்பூர்வ எதிர்க்கட்சித் தலைவர் இல்லாத நாடாளுமன்றத்தில் கொட்ட மடித்தது மோடியின் பா.ஜ.க. அரசு.

2024 நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க.விற்கு கடிவாளம் போட்டவர் கழகத் தலைவர். 2019ல் தமிழ்நாட்டில் வெற்றிகரமாக அமைத்த கூட்டணியை போல, 2024ல் நாடு தழுவிய இந்தியா கூட்டணியை அமைத்தார். எந்தெந்த மாநிலங்களில் எந்தெந்த கட்சிகளுக்கு வெற்றி வாய்ப்பு உள்ளதோ அவர்கள் அதிக இடங்களில் போட்டியிடும்படி, ஃபார்முலா தந்தார்.

**ஆப் கி பார்.. சார் சோ பார்.. என 400 இடங்களுக்கு மேல் வெல்வோம் என மமதையுடன் பேசிய பா.ஜ.க.வுக்கு தனி மெஜாரிட்டி கிடைக்காமல் செய்ததில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுடைய வியூகம் முக்கியமானது.**

இரண்டு நாடாளுமன்ற மக்களவையில் காலியாக இருந்த எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் அமரக்கூடிய அளவிற்கு காங்கிரஸ் வலிமை பெற்றது. ராகுல் காந்தி எதிர்க்கட்சித் தலைவர் ஆனார். சமாஜ்வாடி கட்சியால் உ.பி.யில் ராமர் கோயில் கட்டிய தொகுதியிலேயே பா.ஜ.க. மண்ணைக் கவ்வியது.

தமிழ்நாட்டில் 40க்கு 40 என்ற இமாலய வெற்றியை பெற்று இந்தியாவையே தன் பக்கம் திரும்பி பார்க்க வைத்தார் கழகத் தலைவர்.

அவர் உருவாக்கிய வியூகமும், தனது அயராத உழைப்பால் அவர் பெற்ற வெற்றியும், பா.ஜ.க.வின் 400 தொகுதிகள் கனவை சுக்கு நூறாக்கி, தனிப்பெரும்பான்மை இல்லாத கட்சியாக பலத்தை குறைத்தது. நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை தேவைப்படும் தொகுதி மறு வரையறை சட்டத் திருத்தத்தை நிறைவேற்ற முடியாமல் படுதோல்வி அடைந்துள்ளது ஒன்றிய பா.ஜ.க.அரசு.

**மாநிலங்களின் உரிமையை பறிக்கும் இந்த சட்ட திருத்தத்தை நேரடியாக நிறைவேற்ற துணிவின்றி, பெண்கள் இட ஒதுக்கீடு மசோதாவை முன்னிறுத்திய பா.ஜ.க.வின் போலித்தனமும் பொடிப்பொடி ஆகியுள்ளது.**

**முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் மகத்தான தலைவரால் இந்தியாவின் ஜனநாயகம் மற்றொரு ஆபத்திலிருந்து மீண்டிருக்கிறது. இன்னும் பல களங்கள் உள்ளன.**

**துணிவுடன் எதிர்கொள்ள நம் தலைவர் இருக்கிறார்.**

**மாநிலங்களுக்குரிய தொகுதிகளும், மகளிருக்கான இட ஒதுக்கீடும் அவர் வழிகாட்டுதலில் சரியான முறையில் நிறைவேறும் காலம் வரும்.**

SayNoToNDA

ஸ்டாலின்_தொடரட்டும்



**கோவி. லெனின்**
ஆலோசகர்
கழக தகவல்
தொழில்நுட்ப அணி

## தமிழக முதலமைச்சரின் போர்க்குரல்

# இந்திய மக்களின் இதயக் குரலாக எதிரொலித்திருக்கிறது!

## இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசியத் தலைவர் பேராசிரியர் கே. எம். காதர் மொகிதீன் அறிக்கை!

*திருச்சி, ஏப். 19 -*

தமிழக முதலமைச்சரின் போர்க்குரல் இந்திய மக்களின் இதயக் குரலாக நாடாளுமன்றத்தில் எதிரொலித்திருக்கிறது என்று இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன் தெரிவித்தார்.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசிய தலைவர் பேராசிரியர் கே. எம். காதர் மொகிதீன் 18.4.2026 சனிக்கிழமை விடுத்துள்ள அறிக்கையில் கூறியதாவது :

2026 ஏப்ரல் 17 வெள்ளிக்கிழமை, இந்திய ஜனநாயக சரித்திரத்தில் பொன்னெ முத்துகளால் பொறிக்கப் பட்டு, காலா காலத்திற்கு நினைவு கூர்ந்து போற்றும் தினமாக மாறியிருக்கிறது.

இந்தியாவின் ஜனநாயக மாடலாகத் திகழும் மக்களவையில் தொகுதி மறுவரையறை மசோதா தோற்கடிக்கப்பட்டிருக்கிறது. மத்தியில் ஆளும் பாசிச பாரதீய ஜனதா கட்சி அரசின், ஜனநாயக விரோதமான, மாநிலங்களின் உரிமைகளைத் தகர்த் தெறிய முயன்ற கருப்புச் சட்டம் தொகுதி மறுவரையறை மசோதா, மூன்றில் இருபங்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரிக்க முன் வராததால் மோடி அரசின் கறுப்பு மசோதா புதை குழிக்குள் தள்ளப்பட்டுவிட்டது. இந்தியா கூட்டணி யினரின் ஏகோபித்த எதிர்ப்பு, மக்களின் வெற்றிக்குப் பெரும் உதவி புரிந்திருக்கிறது.

ஒன்றிய அரசின் ஓரவஞ்சனையான தொகுதி மறுவரையறை மசோதா, மாநிலங்களின் உரிமைகளுக்கு வேட்டு வைக்கும் முயற்சி என்றும், தென் மாநிலங்களை இரண்டாந்தர குடிமக்களாக மாறும் சதிவலை என்றும், மாநிலங்களின் கட்டமைப்புகளை உடைத்துச் சிதைத்து புதிய மாநிலங்களைஉருவாக்கும் சதித் திட்டம் என்றும் போர்க் குரல் எழுப்பிய பெருமை தங்கத் தமிழகத்தில் பொங்கு புகழ் பெற்று வரும் திராவிட மாடல் நல்லாட்சி நாயகர் தமிழ்நாட்டு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களையே சாரும்: இந்திய நாடாளுமன்றத்தில் தொகுதி மறுவரையறை மசோதா தோற்கடிக்கப்பட்டது, தமிழக முதலமைச்சர் அவர்களுக்குக் கிட்டி யிருக்கும் கெட்டியான முதல் வெற்றி என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. தமிழகத்தில் இருந்து எழுந்த போர்க்குரல் இந்திய மக்களின் இதயக் குரலாக நாடாளுமன்றத்தில் எதிரொலித்திருக்கிறது. இந்திய அரசியலில் தமிழ்நாடு என்றும் போல் நேர்வழி காட்டியிருக்கிறது என்பது நிரூபனமாகி இருக்கிறது.



இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கித் தந்து போன நமது முன்னோர்களின் தூர நோக்குப் பார்வை எத்துணை அளவு உயர்தது, சிறந்தது, எல்லாக் காலங்களுக்கும் நல்வழி காட்டக் கூடியது என்பதை உணர்த்தும் விதமாக அரசியல் அமைப்புச் சட்ட விதிகள் அமைந்திருக்கின்றன. அரசியல் அமைப்புச் சட்டத் திருத்தம் வேண்டுமெனில் மூன்றில் இருபங்கு நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு இருக்க வேண்டும் என்று வழிவகுத்திருக்கிறார்கள். இது எத்தனை உயர்வான முன்யோசனை என்பதை இன்று நாடு உணர்கிறது. அறிஞர் அம்பேத்கார் உள்ளிட்ட அறிஞர்கள் எத்தகைய சிறப்பான அரசியல் அமைப்புச் சட்டத்தை நமக்கு வழங்கி இருக்கின்றனர் என்று வியந்து பாராட்ட வேண்டியவர்களாக நாட்டு மக்கள் இருக்கிறோம். இந்தியாவின் தனிப்பெரும் சிறப்பு, பன்முகதன்மை, சமத்துவம், சமூக நீதி, வேற்றுமையில் ஒற்றுமை ஆகிய கோட்பாடுகளில் இருக்கிறது. அதனாலதான் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை பாதுகாப்பது ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் கட்டாயக் கடமை என்று அறிஞர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள். இத்தகைய மேன் மக்களின் ஒட்டு மொத்தக் குரலாக இன்றைக்குத் தமிழ்நாட்டு முதலமைச்சர் திராவிட மாடல் நல்லாட்சி நாயகர் தளபதி மு.க.ஸ்டாலின் திகழ்கிறார்.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தைப் பாதுகாக்கவும், ஜனநாயகத்தை நிலை நிறுத்தவும், மாநிலங்களின் உரிமைகளை நிலை நாட்டவும், சமூக நீதி, சகோதரத்துவம், சமயச் சார்பின்மை ஆகியவற்றைக் கடைப் பிடிக்கவும், தமிழகத்தின் தனிப்பெருமையை தரணி எங்கும் பரப்புரை செய்யவும் ஸ்டாலின் தொடரட்டும் ! தமிழகம் வெல்லட்டும் ! நாளைய வரலாறு இந்தப் பெருமையை நாள் எல்லாம் சொல்லட்டும் !

இவ்வாறு பேராசிரியர் கே. எம். காதர் மொகிதீன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

## தனிநபர் மசோதா தாக்கல்!

# மகளிர் இட ஒதுக்கீட்டு மசோதாவை மட்டும் விவாதித்து நிறைவேற்ற வேண்டும்!

## மாநிலங்களவையில் பி.வில்சன் நோட்டீஸ்!

புதுடெல்லி, ஏப். 19 -

மக்களவையில் தற்போதுள்ள 543 இடங்களின் எண்ணிக்கையை மாற்றாமலும், தொகுதி மறுவரையறை அல்லது மக்கள் தொகை கணக்கெடுப்பு எதையும் மேற்கொள்ளாமலும், அடுத்த தேர்தல் முதலே பெண்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கும் வகையிலான ஒரு அரசியலமைப்புத் திருத்த மசோதாவை தி.மு.க. எம்.பி. வில்சன் அறிமுகப் படுத்தியுள்ளார்.

அதேபோன்று, மாநிலங்களின் சட்டமன்றங்கள், தேசிய தலைநகர் பிராந்தியமான டெல்லி, யூனியன்பிரதேசங்களான புதுச்சேரி மற்றும் ஜம்மு காஷ்மீர் ஆகியவற்றிலும், இடங்களின் எண்ணிக்கையை அதிகரிக்காமலும், தொகுதி மறுவரையறை அல்லது மக்கள் தொகை கணக்கெடுப்பு எதையும் மேற்கொள்ளாமலும் பெண்களுக்கு இடஒதுக்கீடு வழங்கவும் இம்மசோதா வழிவகை செய்கிறது. இந்த இடஒதுக்கீடு தற்காலிகமானதல்ல; மாறாக, இது நிரந்தரமாக்கப்பட்டுள்ளது.



மேலும், தொகுதி மறுவரையறை அல்லது மக்கள் தொகை கணக்கெடுப்பு எதையும் மேற்கொள்ளாமலேயே உடனடியாகச் செயல்படுத்தப்பட வேண்டிய பெண்களுக்கான இட ஒதுக்கீடு குறித்து விவாதிப்பதற்காக, இன்றைய அவையின் அலுவல்களை ஒத்திவைக்குமாறு கோரி, மாநிலங்களவை நடைமுறை விதிகளின் விதி எண் 267இன் கீழ், மாநிலங்களவையின் தலைவருக்கு அறிவிக்கையையும் அளிக்கப்பட்டுள்ளது.



# ஜனநாயகம் வெற்றிபெற டெல்லியை வீழ்த்தியது தமிழ்நாடு; ஆதிக்க அரக்கரையும், அடிமைக் கிறுக்கரையும் வெல்வோம் ஒன்றாக !

